4. கவன ஈர்ப்பு

(அ) சங்கரன்கோவில், புறவழிச்சாலை அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

***திருமதி ச. முத்துசெல்வி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதியில், புளியம்பட்டி முதல் புறவழிச் சாலையை விரைவாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது தொடர்பான விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

சங்கரன்கோவில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறையின் 20-1-2012 நாளிட்டப்பட்ட அரசாணை (நிலை) எண் 8-ல் ரூ.24.08 கோடி மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2014 ஆகஸ்ட் 7

இப்புறவழிச் சாலை மாநில நெடுஞ்சாலை எண் 41-ல், ராஜபாளையம்-சங்கரன்கோவில்-திருநெல்வேலி சாலை கி.மீ.28/0ல் (கலப்பாகுளம்) ஆரம்பித்து, அதே சாலையில் கி.மீ. 33/8-ல் (தெற்கு சங்கரன்கோவில்) முடிவடையும் வகையில் 7.021 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட உள்ளது. இப்புறவழிச் சாலை அமைப்பதற்காக கலப்பாகுளம், சங்கரன்கோவில் நகரம், தெற்கு சங்கரன்கோவில் ஆகிய 3 கிராமங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச் சொந்தமான 7.08.59 ஹெக்டேர் நிலம் உட்பட மொத்தம் 15.86.03 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். நில எடுப்பிற்கான நில விவர அட்டவணை திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு 8(1) அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 15(2) அறிவிக்கை வெளியிட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நிலங்களைக் கையகப்படுத்துவது அவசியம் என்பதால், சங்கரன்கோவில் நகரத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குச் சொந்தமான 16,260 ச.மீ. நன்செய் நிலம், தெற்கு சங்கரன்கோவில் மற்றும் கலப்பாகுளம் கிராமங்களில் முறையே 28,696 ச.மீ. மற்றும் 25,903 ச.மீ. புன்செய் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு சிறப்பு அனுமதி வழங்குமாறு ஆதி திராவிடர் நலத் துறை இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் ஆதி திராவிடர் நலத் துறை இயக்குநர் அவர்களால் ஜூன் மாதத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கூடுதல் விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. கூடுதல் விவரங்கள் பெறப்பட்டவுடன் நில எடுப்பிற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்தவுடன், புறவழிச் சாலை அமைக்கும் பணிக்காக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிக் கொடுத்தவர் திரு. பென்னிகுயிக் அவர்கள். அதை தமிழர்களுக்காகக் கட்டிக் காத்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 7] [திருமதி ச. முத்துசெல்வி]

காவேரியை மீட்டெடுத்த எங்கள் காவியத் தாய்! தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை சரிசெய்த வீரமங்கை வேலுநாச்சியார்! பெண்களைக் கண் போலக் காக்கும் காவல் தெய்வம்! வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பார்கள். இன்று வடக்கையும் வாழ வைத்து, தெற்கையும் வாழ வைத்து, தமிழகத்தில் 37 தொகுதிகளிலேயும் வென்று இந்தியாவையே அசர வைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள கவன ஈர்ப்பிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலுரையைப் படித்துப் பார்த்தேன். சங்கரன்கோவில் தொகுதியிலே அரசு தொழிற்பேட்டை, விவசாயத் துறையின் சார்பாக ரூ.4 கோடி மதிப்பீட்டில் எலுமிச்சைக்கான ஆராய்ச்சி நிலையம், அதேபோல தொழிற்பூங்கா, இப்படி பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சியிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கிறேன். இத்தனை நலத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுவதற்கு புறவழிச் சாலைகள் என்பது மிகவும் முக்கியமானது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்ல ஆட்சியிலே, சங்கரன்கோவில் தொகுதியில் புறவழிச் சாலை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான பணியினை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் நகரத்திற்கு 7.021 கி.மீ. நீளத்தில் புறவழிச் சாலை அமைக்க முதற்கட்டப் பணியான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. கலப்பாகுளம், சங்கரன்கோவில் நகரம், தெற்கு சங்கரன்கோவில் கிராமத்தில், மொத்தம் 15.86.03 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினருக்குச் சொந்தமான 7.08.59 ஹெக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்காக, ஆதி திராவிடர் நலத் துறை இயக்குநரிடம் சிறப்பு அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் பிரிவு 15(2)-ன்படி, தினசரி பத்திரிகையில் அறிவிக்கை செய்யப்பட்டு, நில உரிமைதாரர்களிடம் ஆட்சேபணை இருப்பின், அவை ஆய்வு செய்யப்படும்.

அதன் தொடர்ச்சியாக, பிரிவு 15(1)-ன்படி அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டு, அதன் பின்னர், நிலத்திற்கான மதிப்பீடு நிர்ணயிக்கப்படவேண்டும். நில உரிமைதாரருக்கு நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.*